**சுருக்கம்**

மாற்றுத் திறனாளிகள் நலத் துறை – மாற்றுத் திறனாளிகள் நல ஆணையரகக் கட்டுப்பாட்டின் கீழ் செயல்படும் அரசு மறுவாழ்வு இல்லங்களில் தங்கியுள்ள இல்லவாசிகளுக்கு உணவூட்டுச் செலவினம் வழங்குதல் – ரூ.35,44,870/– கூடுதல் நிதி ஒப்பளிப்பு அளித்தல் – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

**மாற்றுத் திறனாளிகள் நலத் (மாதிந.1) துறை**

**அரசாணை (டி) எண்: 1**

**நாள்: 08.01.2019**
**விளம்பி – மார்கழி, 24**
**திருவள்ளுவர் ஆண்டு, 2049**

**படிக்கப்பட்டது:**

1. அரசாணை (நிலை) எண் 9, மாற்றுத் திறனாளிகள் நலத் துறை, நாள் 03.02.2015.
2. மாற்றுத் திறனாளிகள் நல ஆணையரின் கடித ந.க. எண் 2940/ம.இ.நிர்–1/2018, நாள் 25.07.2018.

----

**ஆணை:**

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், பத்து அரசு மறுவாழ்வு இல்லங்கள் மற்றும் ஒரு அரசு ஏழைகள் பராமரிப்பு இல்லம் ஆகியவற்றில் தங்கியுள்ள இல்லவாசிகளின் உணவூட்டுச் செலவினத்தை, நாளொன்றுக்கு பெரியவர்களுக்கு ரூ.25/–லிருந்து ரூ.42/– ஆகவும், சிறியவர்களுக்கு ரூ.21.66–லிருந்து ரூ.37/–ஆக உயர்த்தியும், இத்திட்டத்திற்கென ஜனவரி 2015 முதல் மார்ச் 2015 வரையிலான மூன்று மாதங்களுக்கு மட்டும் ரூ.46,31,940/– (ரூபாய் நாற்பத்தாறு இலட்சத்து முப்பத்தொன்றாயிரத்து தொள்ளாயிரத்து நாற்பது மட்டும்) நிதி ஒப்பளிப்பு செய்து ஆணை வெளியிடப்பட்டது.

2. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், மாற்றுத் திறனாளிகள் நல ஆணையரக கட்டுப்பாட்டின் கீழ் செயல்படும் அரசு மறுவாழ்வு இல்லங்களில் தங்கியுள்ள இல்லவாசிகளுக்கு (835 பெரியவர்கள் + 64 சிறியவர்கள்) டிசம்பர் 2018 முதல் மார்ச் 2019 வரை 4 மாதங்களுக்கு தேவைப்படும் உணவூட்டுச் செலவினத் தொகை ரூ.45,29,998/– எனவும், 2018–2019ஆம் நிதியாண்டின் வரவு செலவு திட்டத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்ட செலவினத் தொகையில் மீதமுள்ள தொகை ரூ.9,85,128/– கழித்தது, போக தேவைப்படும் கூடுதல் செலவினத் தொகை (ரூ.45,29,998 – ரூ.9,85,128) = ரூ.35,44,870/– (ரூபாய் முப்பத்தைந்து இலட்சத்து நாற்பத்து நான்காயிரத்து எண்ணூற்று எழுபது மட்டும்) 2018–2019ஆம் நிதியாண்டின் திருத்திய மதிப்பீட்டில் (Revised Estimate) நிதி ஒதுக்கீடு செய்து அனுமதி ஆணை வழங்குமாறு மாற்றுத் திறனாளிகள் நல ஆணையர் அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

3. மேற்காணும் மாற்றுத் திறனாளிகள் நல ஆணையரின் கருத்துருவினை கவனமுடன் பரிசீலனை செய்த அரசு, அதனை ஏற்று, அரசு மறுவாழ்வு இல்லங்களில் தங்கியுள்ள இல்லவாசிகளுக்கு (835 பெரியவர்கள் + 64 சிறியவர்கள்) டிசம்பர் 2018 முதல் மார்ச் 2019 வரை நான்கு மாதங்களுக்கு உணவூட்டு செலவினம் வழங்குவதற்கு தேவைப்படும் கூடுதல் தொகை ரூ.35,44,870/– (ரூபாய் முப்பத்தைந்து இலட்சத்து நாற்பத்து நான்காயிரத்து எண்ணூற்று எழுபது மட்டும்) நிதி ஒப்பளிப்பு செய்து ஆணையிடுகிறது.

(த.பி.பா.)

4. மேலே, பத்தி–3ல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட செலவினம் பின்வரும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்:–

"2235 – சமூக பாதுகாப்பும் நலனும்–02 – சமூக நலன்–104 – முதியோர் இயலாமையுற்றோர், ஆதரவற்றோர் நலன் – மாநிலச் செலவினங்கள்–AI – தொழுநோய் பிச்சைக்காரர்களுக்கான மறுவாழ்வு இல்லம்–67 – உணவளிக்கும் / உணவுச் செலவுகள் – 09 – ஏனையவை".

[த.தொ.கு. 2235–02–104–AI–6796]

5. மேலே பத்தி–3ல் அனுமதிக்கப்பட்ட செலவினத்தை மேற்கொள்ள தேவையான கூடுதல் நிதியொதுக்கம் ரூ.35,44,870/– 2018–2019ஆம் ஆண்டிற்கான திருத்திய மதிப்பீடு /இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் ஒதுக்கீடு செய்யப்படும். எனினும் 2018–2019ஆம் ஆண்டிற்கான துணை மானியக் கோரிக்கையில் ஒரு குறிப்பிட்ட தொகையை சேர்ப்பதன் மூலம் இச்செலவினம் சட்டப் பேரவையின் பார்வைக்கு கொண்டு செல்லப்பட வேண்டும். அவ்வாறு நிதியொக்கம் செய்ய இருப்பதை எதிர்நோக்கி, மேலே பத்தி–3ல் அனுமதிக்கப்பட்ட தொகையினைச் செலவிட மாற்றுத் திறனாளிகள் நல ஆணையர் அவர்களுக்கு அனுமதி அளிக்கப்படுகிறது. மேலும், 2018–2019ஆம் ஆண்டிற்கான துணை மதிப்பீடுகளில் இத்தொகையை சேர்ப்பதற்கு உரிய வரைவு விளக்கக் குறிப்பினையும் மற்றும் திருத்திய மதிப்பீடு / இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் சேர்ப்பதற்கு உரிய கருத்துருவையும் தவறாது நிதித் (ச.ந/வ.செ.பொ–I) துறைக்கு உரிய நேரத்தில் அனுப்பி வைக்குமாறு மாற்றுத் திறனாளிகள் நல ஆணையர் அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

6. இவ்வரசாணை, நிதித் துறையின் இசைவுடன், அத்துறையின் அலுவல் சார்பற்ற எண் 64524/நிதி(சந)/2018, நாள் 03.01.2019 மற்றும் கூடுதல் நிதி ஒதுக்கப் பேரேடு எண் 2411 (இரண்டாயிரத்து நானூற்று பதினொன்று)–ன்படி வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

சா. விஜயராஜ் குமார்
அரசு செயலாளர்

**பெறுநர்**

மாற்றுத் திறனாளிகள் நலஆணையர், சென்னை–5.
சம்பந்தப்பட்ட அரசு மறுவாழ்வு இல்லங்கள்
(மாற்றுத் திறனாளிகள் நல ஆணையர் வழியாக)
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர், சென்னை–35.

**நகல்:**

முதலமைச்சரின் முதன்மைச் செயலாளர், சென்னை–9.
சிறப்பு நேர்முக உதவியாளர், மாண்புமிகு அமைச்சர்
(சமூக நலம் மற்றும் சத்துணவு திட்டம்), சென்னை–9.
நிதித் (ச.ந/வ.செ.பொ–I & II) துறை, சென்னை–9.
இருப்பு தணிக்கை அலுவலர், சென்னை–9.
இருப்புக் கோப்பு / உதிரி நகல்.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்.